**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>**

**<u>ஜெயங்கொண்டம்.</u>**

<u>CC.No. 87/2018</u>

பெயர்–திருமதி.கோவிந்தம்மாள், க/பெ.ராஜேந்திரன்

நாள்– 01.06.2026 அ.சா.01

(எதிரி ஆஜர்)

**<u>சாட்சி மனுவில் பேரில் ஆஜர்படுத்தப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன் பேரில் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்கள் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் இடையே பொழி சம்மந்தப்பட்ட பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். ஆட்டுக்குட்டியை அடித்த வடிவேலுவின் மகனிற்கு சம்பவ காலத்தில் 4 வயது இருக்கும் என்றால் சரிதான்.நான் வடிவேலுவின் மகனை எனது ஆட்டுக்குட்டியை ஏன் அடித்தாய் என திட்டினேன் என்றால் சரியல்ல. எதிரியின் மகன் ஆட்டுக்குட்டியை அடித்த குச்சியை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதன் அளவு எவ்வளவு இருக்குமென்றால் 2 விரல் அளவு தடிமன் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் 5 மணியா, 6 மணியா என்று எனக்கு தெரியவில்லை. நான் அந்த சமயத்தில் தெரு பெருக்கிக்கொண்டு இருந்தேன். சம்பவ சமயத்தில் என் கணவர் இருந்தாரா என்றால் என்னை மருத்துவமனைக்கு காரில் ஏற்றும்போது வந்தார். சம்பவம் என் கணவருக்கு நான் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். வடிவேலு என்னை அடித்த கழியின்அளவு தெரியுமா என்றால் குண்டானகழியால் என்னை அடித்தான். என்னை அடிக்கபயன்படுத்திய கழியை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான்

போலீசாரிடம் கழியை ஒப்படைக்கவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக கழியை ஒப்படைத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியின் மகனை திட்டிக்கொண்டு வீட்டை விட்டு வெளியே வரும்போது, எனது வீட்டின் அருகாலில் இடித்துக்கொண்டு கீழே விழு தேன் என்றாலும் அதனால் எனது தலையிலும், இடுப்பிலும் அடிபட்டது என்றாலும் சரியல்ல.எதிரிக்கும் எனக்கும் உள்ள பொழி சம்மந்தப்பட்ட பிரச்சனை காரணமாக எதிரி என்னை தாக்கியதாக பொய்யான புகாரினைகொடுத்து, அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு எனது சொந்த காரில் வாழைக்குறிச்சியலிருந்து நான் ஜெயங்கொண்டம் வந்தேன். நான் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு, மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும், என்னை அடித்து தலை, இடுப்பிலும் காயம் ஏற்படுத்தவில்லை என்றாலும், எனக்கு கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

ஒம்/–P.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,

ஜெயங்கொண்டம்.